**13.11.2025.**

**MCOP.No.47/2020**
**எ.ம.சா.3 : மாதேஷ்**
**<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>:-**

7) சாட்சி அசல் ஓட்டுநர் உரிமத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு நகல் குறியீடு செய்யப்பட்டது. எ.மா.சா.ஆ.4 ஆக குறீயீடு செய்யப்படுகிறது. எனது வண்டியில் தான் இறந்து போன நபர் காய்கறி வாங்க வந்தார் என்றால் சரிதான். நான் காய்கறியை ஏற்றிக்கொண்டு செல்லலாமே தவிர சில்லரை வியாபாரம் செய்யததாக சொல்வது மோட்டார் வாகன அனுமதி விதிமுறைகளுக்கு முரணானது என்றால் சரியல்ல. வண்டியை நான் ஓரமாக நிறுத்தி இருந்தால் விபத்து ஏற்பட்டிருக்காது என்றும் நான் வாகனத்தை நடு ரோட்டில் நிறுத்தியதால் தான் விபத்து ஏற்பட்டது என்றும் மேற்படி விபத்திற்கு நானும் ஒரு வகையில் காரணம் என்றால் சரியல்ல. பின்னாடி வந்த வண்டி இறந்து போனவர் மீது மோதி என்னுடைய வண்டியின் நடுவில் மாட்டி இறந்துவிட்டார் என்பதால் மேற்படி விபத்திற்கு நானும் ஒரு பொறுப்பு என்றால் சரியல்ல.

8) என்னுடைய வண்டிக்கு காப்பீடு உள்ளது என்றால் சரிதான். எனக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி சமயத்தில் நான் மேற்படி வாகனத்தின் ஓட்டுநர் இருக்கையில் இருந்தேன் மற்றொரு நபர் தான் விற்றுகொண்டு இருந்தார். அவர் வண்டிக்குள் உட்கார்ந்து கொண்டு விற்று கொண்டிருந்தார். மேற்படி விபத்திற்கு இரண்டு வண்டிகளும் காரணம் என்றால் சரியல்ல. பின்னாடி வேகமாகவும் அஜாக்கிரதையாகவும் வந்த வண்டி மேற்படி இறந்து போன நபர் கமலம் மீது மோதி அவர் என்னுடைய வாகனத்தின் மீதும் மோதி இறந்துவிட்டதாலும் பின்னால் வந்த வாகனத்திற்கு காப்பீடு இல்லை என்பதாலும் என்னுடைய வாகனத்திற்கு காப்பீடு உள்ளது என்பதாலும் மேற்படி விபத்திற்கு நானும் ஒரு காரணம் என்பதாலும் நீதிமன்றம் வழங்கக்கூடிய இழப்பீடு தொகையை என்னுடைய காப்பீடு நிறுவனம் முழுவதும் வழங்க கடமைப்பட்டவர் என்றும் மேற்படி தொகையை செலுத்தி விட்டு விபத்து

ஏற்படுத்திய வாகன உரிமையாளரிடம் இருந்து தொகையை வசூலித்துகொள்ள வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2025.11.13 17:42:15 +0530

**Accidents Claim Tribunal,**
**Attur.**